2018 ஜூன் 14]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவதுதான் கேள்வி. மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அதனை தனிக் கேள்வியாகப் போட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது பாதி கேள்விகளுக்குமேல் மாண்புமிகு உறுப்பினர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல்தான் கேட்கின்றார்கள். தஞ்சாவூரில் கேள்வி கேட்டால், வட ஆற்காட்டில் இருக்கின்றவர்கள் அடுத்த துணைக் கேள்வியை சம்பந்தம் இல்லாமல் கேட்கின்றார்கள். என்ன செய்ய முடியும்? நானும் அனுமதித்துக்கொண்டுதான் இருக்கின்றேன். வாய்ப்பு கொடுக்கவில்லையென்றாலும் வருத்தப்படுகின்றார்கள். சரி ஏதோ தொகுதி பிரச்சினையைப் பேசுகின்றார்கள் என்று அனுமதிக்கின்றேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களை மாதிரி எல்லோரும் திறமையாக படித்துக்கொண்டு வர முடியுமா? அதை எப்படி நீங்கள் அப்படி எதிர்பார்க்கின்றீர்கள்? மாண்புமிகு அமைச்சர்கள் கேள்விக்கு உண்டான பதிலைச் சொல்லத்தான் தயாராக இருப்பார்கள். அந்தமாதிரியெல்லாம் பார்த்தால் சரியாக இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் இருப்பார்கள். இருந்தாலும் அதற்கான நேரமும் இல்லை, காலமும் இல்லை. சரி.*

வினா வரிசை எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

195—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***4160—திரு. ப. சத்திய நாராயணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராய நகர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 14

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், தியாகராய நகர் பகுதியில் கலைக் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக காவல் தெய்வம், விண்ணுலகம் ஆளுகின்ற நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஈன்றா புதல்வர்கள் அம்மாவின் இரு விழிகள். ராமன், லட்சுமணன் ஆகியோர் அயோத்தியை ஆளுமை செய்ததுபோல, நமது தமிழகத்தை ஆளுமை செய்யும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு இப்படியெல்லாம் பேசக் கூடாது. அவர்களுடைய தலைவரை அவர் வாழ்த்திப் பேசிக்கொண்டிருக்கின்றார்.*

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்". "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்". பொதுவாக 12 ஆம் வகுப்பில் 900, 1000 மதிப்பெண் மற்றும் அதற்குமேல் எடுத்த மாணவ, மாணவிகள் ஏதாவது ஒரு கல்லூரியில் நல்ல பாடப் பிரிவில் சேர்ந்து படித்து, நல்ல நிலைக்கு வந்து விடுகிறார்கள். ஆனால் ஏதாவது ஒரு காரணத்தால் 600, 700 எனக் குறைந்த மதிப்பெண் எடுத்தவர்கள் மேற்கொண்டு படிக்க இயலாமல் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை உருவாகாமல் இருக்க, இந்த மாணவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும்வகையில், அனைத்து கலைக் கல்லூரிகளிலும் தனியாக ஒரு வகுப்பறையை உருவாக்கி அவர்கள் மேற்கொண்டு படித்திட வாய்ப்பினைத்*

2018 ஜூன் 14]

தர வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களை தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தியாகராய நகர் தொகுதிக்கு உட்பட்ட அசோக் நகர், புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி சுமார் 3 ஏக்கர் பரப்பளவு கொண்டது. அதில் சுமார் 250 மாணவர்கள் மட்டுமே பயில்கின்றனர். இப்பள்ளியை நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் பெயரில் அரசு கலைக் கல்லூரியாக மாற்றிக் கொடுத்தால் அசோக் நகர், வடபழனி, கோடம்பாக்கம், மேற்கு மாம்பலம், விருகம்பாக்கம், தி. நகர், எம்.ஜி.ஆர். நகர், மேற்கு சைதாப்பேட்டை, வளசரவாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஏழை எளிய மாணவர்களும், குறைந்த மதிப்பெண் எடுத்த மாணவர்களும் தங்களின் வாழ்க்கையை நல்ல நிலைக்கு எடுத்துச் செல்ல மீண்டும் ஒரு வாய்ப்பாக அமையும் என்பதால் எனது கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களின் கவனத்திற்கும் எடுத்துச் சென்று, அதற்குரிய ஆணையை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் பெற்றுத் தருவார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முழு நம்பிக்கையோடு கேள்வியைக் கேட்டுவிட்டு, உட்கார்ந்திருக்கிறார். ஏதாவது பதிலைச் சொல்லுங்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய தியாகராஜ நகர் தொகுதி, சென்னை மாவட்டத்தில் அமைந்துள்ளது. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 7 அரசுக் கல்லூரிகளும், 14 அரசு உதவிபெறும் கல்லூரிகளும், 18 சுயநிதிக் கல்லூரிகளும் சேர்ந்து, மொத்தம் 39 கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே பார்க்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியைச் சுற்றி அரசுக் கல்லூரிகளாக இருக்கக்கூடிய 7 கல்லூரிகளில், காயிதேமில்லத் கல்லூரி அரசு மகளிர் கல்லூரியானது ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலும், நந்தனம்*

[2018 ஜூன் 14

ஆடவர் கலைக் கல்லூரி மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும், ராணி மேரி கல்லூரியானது ஆறு கிலோ மீட்டர் தொலைவிலும், மாநிலக் கல்லூரியானது எட்டு கிலோ மீட்டர் தொலைவிலும், பாரதி மகளிர் கல்லூரி 10 கிலோ மீட்டர் தொலைவிலும், அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி 12 கிலோ மீட்டர் தொலைவிலும், இராதாகிருஷ்ணன் நகர் அரசு கலைக் கல்லூரி 13 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளன. இந்த அளவுக்கு கல்லூரிகள் மிக அருகில் அமைந்திருக்கின்றன.

அந்தவகையிலே பார்க்கின்றபோது, அரசுக் கல்லூரிகளில் கடந்த ஆண்டு ஒப்பளிக்கப்பட்ட இடங்களில்கூட 1,485 இடங்கள் காலியாகவுள்ளன. அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 2,510 இடங்கள் காலியாகவுள்ளன. ஆக, 3,995 இடங்கள் கடந்த 2017–2018 ஆம் கல்வியாண்டிலே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் காலியிடங்கள் இருக்கின்றன. குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கர்கள் சேர்வதற்காகத் தனியாக ஒரு வகுப்பறையைத் தோற்றுவிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரினார்கள். முதலிலே counselling நடக்கின்ற காலத்திலே அதிக மதிப்பெண் பெற்றவர்களெல்லாம் அவர்களுக்குத் தேவையான பாடப் பிரிவுகளைப் பெற்று இடம் அமர்கிறார்கள். கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 1,321 பாடப் பிரிவுகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அந்தப் பாடப் பிரிவுகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய சென்னையில் மட்டும் 108 பாடப் பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஏழையெளிய மாணவ, மாணவிகள் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களும், உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே தொடரும் இந்த அரசானது தற்போது பாடத் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் உள்ள பள்ளியிலே வரக்கூடிய காலக்கட்டங்களில் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அனைவருக்கும் உயர் கல்வி அளிக்கும் வகையில் செயல்பட்டுக்

2018 ஜூன் 14]

கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலான இந்த அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும் எடுத்துக்கூறி, எதிர்வரக்கூடிய காலத்தில் அதுபற்றி பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

196—

நேரடி கொள்முதல் நிலையம்

***11910—திரு. வெ. கணேசன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திட்டக்குடி தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சிப் பகுதியில் புதிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் திட்டக்குடி தொகுதி, பெண்ணாடம் பேரூராட்சிப் பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு இன்று வரை 1,197 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்த நெல்